**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

| | | |
|---|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | } | Case No. CC 151 of 2025 |

Depositions of PW -1 witness for ________ { Prosecution / Defence / Court

Name : ரத்தினசாமி

Father's Name : குப்புசாமி

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of November** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் கோவை மாவட்டம் பூரண்டம்பாளையத்தில் குடியிருந்து கொண்டு டெயிலராக வேலை பார்த்து வருகிறேன். வழக்கு சம்பவத்தில் இறந்த கந்தசாமி எனது சித்தப்பா. 03.12.2021 ஆம் தேதி காலையில் எனது இருசக்கர வாகனத்தில் பல்லடம் சென்று எனக்கு தேவையான நூல் வாங்கிக் கொண்டு கடைக்கு திரும்ப வந்து கொண்டிருந்த பொழுது சுல்தான்பட்டை நெடுஞ்சாலை துறை அலுவலகம் அருகே உள்ள சுவையகம் ஓட்டலில் நானும் எங்கள் ஊரைச் சார்ந்த நிஷாந்த் மற்றும் செஞ்சேரி சேர்ந்த பழனிச்சாமி ஆகியோர் டீ சாப்பிட்டு விட்டு மதியம் சுமார் 12.30 மணியளவில் இருந்த பொழுது எனது சித்தப்பா கந்தசாமி அவருக்கு சொந்தமான TVS XL SUPER TN 41 AE 6005 வண்டியில் மேற்கிலிருந்து கிழக்காக செஞ்சேரி செல்வதற்காக ரோட்டை கடந்த பொழுது பொள்ளாச்சியில் இருந்து சுல்தான்பேட்டை நோக்கி வந்த புல்லட் ரோட்டை கடந்து கொண்டிருந்த எனது சித்தப்பா இருசக்கர வாகனத்தின் மீது மோதி விட்டது.

2. நான் பார்த்தவுடன் மேற்படி விபத்தில் காயம் அடைந்தவர் எனது சித்தப்பா என தெரிந்து கொண்டேன். அவருக்கு வலது கை, வலது கால், தலை ஆகிய இடங்களில் அடிபட்டு இருந்தது. என்னுடன் இருந்த நிஷாந்த் மற்றும் பழனிச்சாமி இருவரும் ஆம்புலன்ஸ் வரவழைத்து எனது சித்தப்பாவை பல்லடம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துவிட்டு நான் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் என்னால் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்டது தான். புகார் **அ.சா.ஆ.1 ஆக** ஒன்றாக குறியீடு செய்யப்படுகிறது.

3. எதிரிதான் சம்பவத்தின் பொழுது புல்லட் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார். bullet vehicle no TN 41 AX 3924 ஆகும். மருத்துவமனைக்கு எனது சித்தப்பாவை அழைத்துச் சென்றவர்களிடம் எனது சித்தப்பா குறித்து கேட்ட பொழுது மருத்துவர்கள் எனது சித்தப்பாவை பரிசோதித்து அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்ததாக என்னிடம் கூறினார்கள். நான் மருத்துவமனை சென்று பார்த்த பொழுது எனது சித்தப்பா இறந்த நிலையில் சவக்கடங்கில் இருந்தார். பின்னர் மறுநாள் உதவி ஆய்வாளர் எனது சித்தப்பாவின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டுபொழுது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாரில் மேல் பகுதி மற்றும் கீழே தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான், ஆனால் புகார் உள்ளே தேதி குறிப்பிட்டு கொடுத்துள்ளேன். விபத்து சம்பவத்தின் பொழுது எனது சித்தப்பா அவர்களுக்கு வயது சுமார் 80 இருக்கும் என்றால் சரிதான். எனது சித்தப்பாவிற்கு இருசக்கர வாகனம் ஓட்டுனர் உரிமம் கிடையாது என்றும் மேற்படி வாகனத்திற்கு எந்த ஆவணங்களும் இல்லை என்றால் சரியல்ல. சுவை உணவகத்தில் இருந்து பார்த்தால் விபத்து சம்பவ இடம் தெரிய வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல, நன்றாக தெரியும். சாட்சிகள் நிஷாந்த் மற்றும் பழனிச்சாமி இருவரும் என் நண்பர்கள்.

2. விபத்து சம்பவ இடத்திற்கு எதிரில் ஆவின் பாலகம் மற்றும் அருகில் கடைகள் உள்ளது அதில் எப்பொழுது பொதுமக்கள் இருப்பார்கள் என்றால் சரிதான். எனது சித்தப்பாவை நான் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவில்லை என்றால் சரிதான்.நான் உண்மையாக சம்பவ இடத்தில் இருந்திருந்தால் காயம் அடைந்த எனது சித்தப்பாவை மருத்துவமனைக்கு நான் அழைத்துச் சென்று சேர்த்து இருப்பேன் என்றும் எனது நண்பர்களை அழைத்துச் செல்லுமாறு சொல்லி இருக்க மாட்டேன் என்றும் நான் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் நான் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும் அப்பொழுது வழக்கிற்காக சம்பவ இடத்தில் இருந்தேன் என்றும் எனது நண்பர்கள் மூலமாக அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சொன்னதாகவும் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தில் இறந்த எனது

சித்தப்பாவிற்கு சம்பவத்தின் பொழுது வயது 80 என்றும் அவருக்கு பார்வை குறைபாட்டினால் அவ்வழியாக வரும் வாகனங்களை கவனிக்காமல் திடீரென நிலை தடுமாறி சாலையில் விழுந்ததால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.11.05 18:54:15 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**